# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 24 திங்கட்கிழமை 09.06.2025 கதிர் 220







# கைது பயத்தில் கடவுளை நாடும் அரசியல்வாதிகள்



கொழும்பு, ஜூன் 09

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டனர் எனக் கருதப்படும் சில அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் தற்போது வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனச் சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் கைது செய்யப்பட்டு வரும் நிலையிலேயே இவர்கள் இவ்வாறு விகாரைகள் மற்றும் கோயில்களுக்குச் சென்று வழிபடுகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

கதிர்காமத்தில் அண்மைய நாட்களில் 20 இற்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் இதுவரை விசேட வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. அத்துடன், சில அரச அதிகாரிகள் அநுராதபுரம், ஸ்ரீ மகாபோதியில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

7➤

# உதய கம்மன்பிலவை இன்று 4 மணிநேரம் துருவிய சி.ஐ.டி.

## 323 கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில்



கொழும்பு, ஜூன் 09

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கினார்.

இலங்கை சுங்கத்திடம் இருந்து 323 கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக உதய கம்மன்பில குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று திங்கட்கிழமை காலை முன்னிலையாகினார்.

இதன்போது முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் இருந்து 4 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் உதய கம்மன்பில குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

# நாளை ஜேர்மனிக்கு பறக்கின்றார் அநுர



கொழும்பு, ஜூன் 09

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை (10) செவ்வாய்க்கிழமை இரவு ஜேர்மனிக்குப் பயணமாகின்றார்.

ஜேர்மனியால் விடுக்கப்பட்ட அதிகாரபூர்வ அழைப்பையேற்று அங்கு செல்லும் ஜனாதிபதி 7➤

# வவுனியாவில் வீட்டில் இருந்து 10 கிலோகிராம் கஞ்சா மீட்பு!



வவுனியா, ஜூன் 09

வவுனியாவில் வீட்டில் மறைந்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 7➤

# சிறைச்சாலை ஆணையாளர் அதிரடியாக பணி இடை நீக்கம்



கொழும்பு, ஜூன் 09

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இன்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட கைதிகளின் பட்டியலில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு பிறிதொரு கைதி விடுதலை செய்யப்பட்ட 7➤

# யாழில் ஹெரோய்ன், கஞ்சாவுடன் கைதான இருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூன் 09

ஹெரோய்ன் மற்றும் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவரிடம் இருந்து 2 7➤

# காட்டுப்பாதை வெள்ளியன்று திறக்கப்படும்



கொழும்பு, ஜூன் .09

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்கு செல்லும் பாதை யாத்ரீகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டு, மீண்டும் குறித்த காட்டுப்பாதை ஜூன் மாதம் 04ம் திகதி மூடப்படும் என, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம ஞாயிற்றுக்கிழமை (09) அன்று தெரிவித்தார்.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகன் ஆலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா 26 ம் திகதி ஆரம்பமாகி ஜூலை மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவ அத்துடன் நிறைவடையும் என கூறினார்.

கதிர்காமத்திற்கு பாதயாத்திரையாக செல்வோர் உகந்தமலை முருகன் ஆலயத்தில் ஓரிரு நாட்கள் தங்கியிருந்து குமண யால காட்டினூடாக பிரவேசித்து கதிர்காமத்தை சென்றடைவது வழக்கமாகும்.

வெள்ளிக்கிழமை 20 ஆம் திகதி காலை உகந்தமலை முருகன் ஆலயத்தில் நடைபெற இருக்கும் ஆரம்ப வைபவத்தை அடுத்து காட்டுப்பாதை காலை ஆறு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை மாத்திரமே திறந்து இருக்குமெனவும் அக் காலப்பகுதிக்குள் மட்டுமே காட்டுக்குள் செல்ல யாத்திரீகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவித்தார்.

தனித்தனியாக அல்லது ஐந்து பேர் சேர்ந்து காட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். குறைந்தது 15 அல்லது 20 பேர் அல்லது அதற்கும் அதிகமான தொகையினர் சேரும் போது தான் உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் யாத்திரீகர்கள் அனைவரும் தத்தமது அடையாள அட்டைகளை கொண்டு வருவது கட்டாயம் எனவும் தெரிவித்தார். இம்முறை ஆலயம் மற்றும் ஆலய சுற்றுச்சூழல் பிரதேசங்களில் சுகாதாரம் தொடர்பான கண்காணிப்புக்கு அம்பாறை, கல்முனை மற்றும் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைகள் பொறுப்பாக இருக்கும்.

விசேட பாதுகாப்பு மற்றும் அடியார்களுக்கு 24 மணி நேர வைத்திய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். உகந்தமலை முருகனாலயத்திலிருந்து குமுக்கனூடாக யால வனப்பகுதியூடாக பாத யாத்திரிகர்கள் செல்லம் போது யாரும் உணவுப் பொதிகளையும், பிளாஸ்டிக் தண்ணீர்ப் போத்தல்களை வழங்க முடியாது எனவும், குடிநீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், நீரை வீண் விரயம் செய்ய வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

காட்டு வழியாக செல்லும் யாத்திரிகர்கள் செல்லும் பாதையில் பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் பைகளை வீசாமல் செல்லுமாறும் கேட்டுள்ளார் (ஐ)

# கச்சதீவை மீட்க வேண்டும்: மதுரை ஆதீனம் மனு


கொழும்பு, ஜூன் .09

மதுரை சென்ற வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம், இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க வேண்டும் என மதுரை ஆதீனம் மனு அளித்துள்ளது.

மதுரையில் நடைபெற்ற பா.ஜ.க. மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மதுரை சென்றார். அவர் நேற்று காலை மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு சென்று வழிபட்டார். முன்னதாக மீனாட்சியம்மன் கோயிலுக்கு சென்ற அமித் ஷாவை மதுரை ஆதீனம் சார்பில் சால்வை அணிவித்து வரவேற்று புத்தகம் மற்றும் மனு வழங்கப்பட்டது.


பின்னர் மதுரை ஆதீன ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கூறுகையில்,

பிரதமர் மோடி மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வரும்போதும் அவரை சந்தித்து பேசினேன். இப்போது உள்துறை அமைச்சர் அமித் ஷா வந்துள்ளார். அவரை கோயில் முன்பு வரவேற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. அமித் ஷாவிடம் மனு ஒன்றை அளித்தேன். அதில் இலங்கையில் தமிழர்களுக்கு தனி நாடு ஏற்படுத்த வேண்டும், கச்சதீவை மீட்டு இந்தியாவுடன் சேர்க்க வேண்டும். இந்திய மீனவர்கள் தாக்கப்படாமல் இருக்கவும், மீனவர்கள் பிரச்சினையை தீர்க்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளேன் என்றார். (ஐ)





# கொள்கலன்கள் பற்றிய விபரங்கள் அம்பலப்படுத்தப்படும்



கொழும்பு, ஜூன் .09

கொள்கலன்கள் பற்றிய விபரங்கள் அம்பலப் படுத்தப்படும் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கொள்கலன்கள் தொடர்பிலான விபரங்கள் ஆதாரத்துடன் வெளியிடப்படும் என அவர் தெரிவித்துள்ளார். சாட்சியங்கள் இன்றி தகவல்களை வெளியிடுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏதேனும் ஓர் வார்த்தை தவறினால் அதனைக் கொண்டு எம்மை சிறையில் அடைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கொள்கலன்களை விடுவித்த நபரிடம் இந்த குற்றச் செயலுக்கு தண்டனை விதிக்கப்படாத என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்புவதாகத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எதனைக் கேட்க வேண்டுமெனத் தெரியாமல் கேள்விகளை கேட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தாம் அம்பலப்படுத்தி வரும் விடயங்களில் ஆறாவது விடயமாக சட்டவிரோதமாக கொள்கலன் விடுவிப்பு மற்றும் அவற்றில் கொண்டு வரப்பட்ட பொருட்கள் பற்றிய விபரங்களை இன்று வெளியிட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு வாக்குமூலமொன்றை அளிக்கச் செல்வதற்கு முன்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார். (ஐ)

# வடக்கில் தோன்றிய அரசியல் அணிகள்!



கொழும்பு, ஜூன் .09

எந்தக் கட்சிக்குக் கூடுதலான ஆசனங்கள் இருக்கின்றனவோ அந்தக்கட்சிக்கு ஆதரவளிப்போம் என்று கூறியவர்கள் திடீரெனக் கட்சி என்ற சொற்பதத்தைத் தவிர்த்து அணி எனச் சொல்லத் தொடங்கினார்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் சாடியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு யாழ்ப்பாணம், நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஏனைய கட்சிகளைப் போல ஒரு கூட்டத்தை ஒழுங்குபடுத்திவிட்டு அந்த விடயம் வெளியில் தெரியவந்தவுடன் காலவரையின்றி பிற்போட்டுவிட்டோம் என்று சொல்வதும், அந்தக் கட்சியில் இருந்து இன்னொருவர் அப்படி ஒரு கூட்டம் நடக்கவே இல்லை.

ஊடகங்கள் பொய் சொல்கின்றன எனப் பொய்களைச் சொல்லும் வழக்கம் எங்களுடைய கட்சியில் இல்லை. ஆகவே, கட்சியின் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்திய கட்சியின் தலைவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

சமஷ்டி அடிப்படையில் மக்களுக்கு ஆட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதே இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும்.

தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் ஒரேயொரு கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகும். அதற்காக நாங்கள் ஏனைய கட்சிகளைப் புறக்கணிக்கவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்ற கையோடு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மக்களுடைய ஆணையை ஏற்றுக்கொள்கின்றோம் என்பதைக் குறிப்பிட்டிருந்தோம்.

மக்கள் தவறு இழைத்தார்கள் என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் கூறவில்லை. ஆட்சி முறை மாற்றப்பட வேண்டும் என 1956ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்பை இந்த நாட்டின் அரசுகள் கண்டுகொள்வதில்லை.

மக்கள் தீர்ப்பை அரசு ஏற்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். தற்போது இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களின் ஜனநாயகத் தீர்ப்பை மதியுங்கள் என ஏனைய கட்சிகளுக்குக் கூறுகின்றோம்" என தெரிவித்துள்ளார். (ஐ)




# அரசாங்கத்தின் மீதான மக்கள் நம்பிக்கைக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது

கொழும்பு, ஜூன் .09

அரசாங்கம் மீதான மக்களின் நம்பிக்கைக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளதாக கோட்டே சிறி கல்யாணி சமாக்ரி தர்ம மஹா சங்க சபையின் அனுநாயக்க பேராசிரியர் கொட்டாபிட்டியே ரா/ஹல தேரர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஹரினி அமரசூரிய பங்கேற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளினால் மக்கள் விரக்தி அடைந்ததாகவும், அந்த விரக்தி காரணமாகவே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆட்சி அதிகாரம் வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி மீதான நம்பிக்கையின் காரணமாக மக்கள் கட்சிக்கு வாக்களித்தார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சி வழங்கப்பட்டு சில மாதங்கள் கடந்துள்ள நிலையில் மக்களின் நம்பிக்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அவர்களது எதிர்பார்ப்புக்களை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அரசாங்கம் சரியில்லை என மக்கள் விமர்சனம் செய்யும் வகையில் செயற்படக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய கொள்கலன் விடுவிப்பு, வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள் போன்றன நேர்மையான முறையில் மேற்கொள்ளப்பட்டது என்பதை அரசாங்கம் நாட்டு ம

விமர்சனங்களை அரசாங்கம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது எனவும், தாம் செய்யும் அனைத்தும் சரி என்ற நிலைப்பாடு வீழ்ச்சியை நோக்கி நகர்த்தி விடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# விரைவில் செயற்படவுள்ள மேற்கத்திய மருந்து உற்பத்தி ஆலை

கொழும்பு, ஜூன் .09

குருநாகல் – பிங்கிரியவின் ஏற்றுமதி செயலாக்க மண்டலத்திற்குள் அமைக்கப்பட்டு வரும், சினெர்ஜி பார்மாசூட்டிகல்ஸ் கோர்ப்பரேசன் (பிரைவேட்) லிமிடெட் **(The Synergy Pharmaceuticals Corporation (Pvt) Ltd** தொழிற்சாலையின் கட்டுமானப்பணிகள் நிறைவு பெறும் கட்டத்தை எட்டியுள்ளன.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த நிர்மாணத்தை அண்மையில் பார்வையிட்டுள்ளார்.

ஏற்கனவே ஆரம்ப உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் இந்த தொழிற்சாலை, இலங்கையின் மிகப்பெரிய மேற்கத்திய மருந்து உற்பத்தி ஆலையாக மாற உள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் அரசாங்கம்!

*கொழும்பு, ஜூன் .09*

*மின் கட்டண தீர்மானத்தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீன தலையீடு தடுக்கப்பட்டுள்ளது என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.*

*கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,*

*வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள மின்சார சபை (திருத்தச்) சட்டமூலத்தில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை முழுமையாக பலவீனப்படுத்தும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.*

*ஆணைக்குழுவின் அதிகாரங்களை நிதியமைச்சு மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு பொறுப்பாக்கும் முயற்சிகள் இந்த சட்டமூலத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*மின் கட்டண தீர்மானத்தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீன தலையீடு தடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபை 2015 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டது.*

*2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எரிபொருள் மற்றும் மின்சாரத்துக்கு விலை நிர்ணயம் கொண்டு வரும் யோசனையை கொண்டு வந்தேன். இந்த யோசனைக்கு நிதியமைச்சு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியது.*

*எரிபொருள் ஊடாக கிடைக்கும் வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவே நிதியமைச்சு கட்டண நிர்ணயத்துக்கு அன்று எதிர்ப்பு தெரிவித்தது. அதன் பிரதிபலனை இன்று எதிர்கொள்ள வேண்டியுள்ளது.*

*(ஐ)*

# அரசியல் செய்ய வயது தடையில்லை கருணாநிதியை ஒப்பிட்டு ராமதாஸ் கருத்து



அரசியலுக்கு வயது கிடையாது அன்புமணியுடன் பேசியது ரகசியம் நல்ல செய்தி விரைவில் வரும் என, அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

அரசியலுக்கு வயது கிடையாது. கருணாநிதி 95 வயது வரை அரசியலில் இருந்தார். சக்கர நாற்காலியில் அமர்ந்து முதல்வராக செயல்பட்டார். உலக அளவில் மகாதீர் முகமது 92 வயதில், மலேஷியாவின் பிரதமராக இருந்தார். அதனால், அரசியல்வாதிகள் அரசியல் செய்ய வயது கிடையாது. வயது என்பது வெறும் எண் மட்டுமே. விரைவில் நல்ல செய்தி வரும். நான் சென்னையில் இருக்கும் போது வருமா, தைலாபுரம் தோட்டம் சென்ற பிறகு வருமா என்பது தெரியாது. நான் பல தலைவர்களோடு, பிரதமர்களோடு நெருங்கி பழகியிருக்கிறேன். பிரதமர் மோடி எனது நெருங்கிய நண்பர்.

உள்துறை அமைச்சர் அமித் ஷாவை, நான் சந்தித்தது இல்லை. ஆனால், அவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தியாவை உலகின் முதல் நாடாக்க பிரதமர் மோடியும், அமித் ஷாவும் இணைந்து செயல்படுகின்றனர். அதனால், அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

பா.ம.க.,வில் நடக்கும் குழப்பங்களால் தொண்டர்கள், நிர்வாகிகளுக்கு சோர்வு வராது. அவர்கள் எதிர்பார்க்கும் நல்ல செய்தி விரைவில் வரும்.

கூட்டணி யாரோடு, எப்போது எப்படி அமையும் என்பதை, இப்போது சொல்ல முடியாது. இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் தெரிய வரும். தேசிய கட்சி, மாநில கட்சி என எந்த கட்சியுடனும் வேண்டுமானாலும் கூட்டணி இருக்கலாம்.

ஆடிட்டர் குருமூர்த்தியை தைலாபுரத்திலும் சந்தித்தேன் சென்னையிலும் சந்தித்தேன். தைலாபுரத்தில் அன்புமணியுடன் பேசியது ரகசியம். அதை இப்போது சொல்ல முடியாது. நேரம் வரும்போது தானாகவே அது வெளிப்படும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## அ.தி.மு.க., -- பா.ம.க.,வை கபளீகரம் செய்வதே அமித் ஷாவின் இலக்கு: தி.மு.க.,



தமிழ் மீதும், தமிழர்கள் மீதும் அமித் ஷா காட்டும் அக்கறை என்பது பசுத்தோல் போர்த்திய புலி போன்றது. ஒடிசா, ஹரியானா, மஹாராஷ்டிரா, டில்லி போல தமிழகத்திலும் பா.ஜ., ஆட்சி மலரும் என அமித் ஷா பேசியிருக்கிறார்.

ஒடிசா தேர்தலின்போது, ஐ.ஏ.எஸ்., அதிகாரி பாண்டியனை குறிப்பிட்டு, தமிழகத்தைச் சேர்ந்தவர் ஒடிசாவை ஆட்சி செய்வதா என சீறினார். இப்போது தமிழ், தமிழர்கள் என மதுரையில் கபட வேடம் தரிக்கிறார்.

அ.தி.மு.க.,வை மிரட்டி விழுங்கிக் கொண்டிருக்கும் அமித் ஷா, தி.மு.க., ஆட்சி மீது அவதூறு பொய் மூட்டைகளை அவிழ்த்து உள்ளார்.

கடந்த 2021 சட்டசபை தேர்தலில், பா.ஜ., தலைவர்கள் தயவு செய்து பிரசாரத்துக்கு வர வேண்டாம் என்று அ.தி.மு.க., வேட்பாளர்கள் கெஞ்சும் அளவுக்கு பா.ஜ., மீதான வெறுப்பு தமிழகத்தில் நிலவியது.

அந்த வெறுப்பு அடங்கவில்லை என்பதையே லோக்சபா தேர்தல் முடிவும் காட்டியது. தமிழகத்தை தொடர்ந்து வஞ்சிக்கும் பா.ஜ., மீதான வெறுப்பு அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது.

இதெல்லாம் உளவுத் துறை மூலம் அமித் ஷாவுக்கு தெரியும். தேர்தலில் வெல்வது அவரது நோக்கமல்ல. அ.தி.மு.க., - பா.ம.க., கட்சிகளைக் கபளீகரம் செய்து அந்த இடத்திற்கு பா.ஜ., வர வேண்டும் என்பதே அவர்களின் ஒற்றை இலக்கு. அதற்காக 2026 சட்டசபை தேர்தலைப் பயன்படுத்துகின்றனர்.

இப்போது அந்தப் பணியை அமித் ஷா கையில் எடுத்துள்ளார். எத்தனை 'ஷா'க்கள் வந்தாலும் தமிழகத்தில் ஒன்றும் செய்ய முடியாது.

ஏற்கனவே, 13 தேர்தல்களில் வெற்றி பெற்ற தி.மு.க., கூட்டணி, 2026 தேர்தலில் மட்டுமல்ல அதன் பின் வரும் தேர்தல்களிலும் தொடர் வெற்றியைப் பெறும். இவ்வாறு அவர் கூறியுள்ளார் .(ஐ)



## 200 இடங்களில் வெற்றி என பகல் கனவு முதல்வர் மீது பழனிசாமி பாய்ச்சல்

"அ.தி.மு.க., தலைமையிலான கூட்டணியில், மேலும் பல கட்சிகள் இணையும்," என, அக்கட்சி பொதுச்செயலர் பழனிசாமி தெரிவித்தார்.

தமிழகத்தில், அ.தி.மு.க., தலைமையில் தான் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. விரைவில், இந்த கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணையும்.

தி.மு.க., கூட்டணி 200 இடங்களில் வெல்லும் என, செல்லும் இடங்களில் எல்லாம் முதல்வர் பேசி வருகிறார் அது நடக்கவே நடக்காது. முதல்வர் பகல் கனவு காண்கிறார். வரும் 2026 சட்டசபை தேர்தலில், அ.தி.மு.க., கூட்டணி வெற்றி பெறும்.

நான் முதல்வராக இருந்தபோது, ஆறு புதிய மாவட்டங்களை உருவாக்கினோம். தி.மு.க., ஆட்சிக்கு வந்து, நான்காண்டுகள் கடந்தும், ஒரு புதிய மாவட்டம் கூட உருவாக்கப்படவில்லை.

அ.தி.மு.க., ஆட்சியில் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வந்தோம். தி.மு.க., ஆட்சியில் எதுவும் செய்யவில்லை.

கடந்த 2017 முதல் 2021 வரை, அ.தி.மு.க., ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு, தி.மு.க., அரசு ஸ்டிக்கர் ஒட்டி வருகிறது. அ.தி.மு.க., ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட குடிமராமத்து திட்டம், அம்மா மினி கிளினிக் போன்ற அற்புதமான திட்டங்களை, தி.மு.க., அரசு முடக்கி விட்டது.

மக்களை பற்றி கவலைப்படாமல், தன் குடும்பத்தை சேர்ந்தவர்கள் அதிகாரத்திற்கு வர வேண்டும் என்பதே, முதல்வர் ஸ்டாலினின் நோக்கம்.

கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி, அடுத்து இன்பநிதி பதவிக்கு வர வேண்டும் என்பதே ஸ்டாலினின் குறிக்கோள். ஓட்டளித்த மக்களை பற்றி கவலைப்படாமல், வீட்டு மக்களை பற்றி கவலைப்படும் முதல்வர், ஸ்டாலின் மட்டுமே.

தி.மு.க.,வை சேர்ந்த காந்திசெல்வன், மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சராக இருந்தபோதுதான், 'நீட்' கொண்டு வரப்பட்டது. நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் அ.தி.மு.க.,வின் நிலைப்பாடு.

அரசுப் பள்ளி மாணவர்களின் நலனுக்காகவே, 7.5 சதவீத உள் இட ஒதுக்கீட்டை கொண்டு வந்தோம். அதனால், அரசு பள்ளிகளில் படித்த, ஏழை குடும்பங்களைச் சேர்ந்த 3,460 பேர் எம்.பி.பி.எஸ்., படிக்கின்றனர். அவர்களுக்கான கல்வி செலவு முழுவதையும், அ.தி.மு.க., அரசே ஏற்றது.

சுகாதாரத்துறையில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழகம் இருப்பதற்கு அ.தி.மு.க., அரசே காரணம். தமிழகத்தின் வளர்ச்சிக்கு காரணமான அ.தி.மு.க., மீண்டும் ஆட்சிக்கு வர, கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் தேனீக்களை போல சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும்.

(ஐ)

## புலிகள் காப்பகத்தில் மரங்கள் வெட்டி கடத்தல் வன ஆர்வலர்கள் அதிர்ச்சி!

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம், முண்டந்துறை புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட கொடமாடியில், புதிய சாலை அமைப்பதாக கூறி, தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் அனுமதியின்றி வனத்துறையினரே அரியவகை மரங்களை வெட்டி கடத்துவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



திருநெல்வேலி மாவட்டத்தில் தெற்கில் களக்காடு முதல் வடக்கில் முண்டந்துறை வரை புலிகள் காப்பகம் செயல்பட்டு வருகிறது. இந்த பகுதி மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரில் அமைந்துள்ளது. இப்பகுதியில் சேர்வலாறு அணை அருகே உள்ள குடமாடியிலிருந்து சுமார் 15 கிலோமீட்டர் மலைப்பாதை வழியாக வாளையார் வரையிலும் ஒரு தடம் அமைந்துள்ளது. இந்த வாளையார் பகுதியில் வன வேட்டை தடுப்பு காவலர்களுக்கான ஓய்வறையும் உள்ளது.

புலிகள் காப்பக பகுதிகளில் மரங்களை வெட்ட, சாலை அமைக்க, புதிய கட்டடங்கள் கட்ட ஆகிய பணிகளுக்காக தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் அனுமதி அளிக்க வேண்டும். இருப்பினும், கடந்த சில தினங்களாக வாளையார் பகுதியில் வனத்துறையினர் இயந்திரங்களைக் கொண்டு மரங்களை வெட்டி வருகின்றனர். இதற்கான எந்தவிதமான தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் அனுமதியும் பெறப்படவில்லை என்பது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வனப்பகுதியில் கட்டளை மலை எஸ்டேட் உள்ளிட்ட சில தனியார் எஸ்டேட்கள் உள்ளன. 'காய்ந்த மரங்களை அப்புறப்படுத்துகிறோம்' என்கிற பெயரில், வெட்டிய மரங்களை லாரிகளில் ஏற்றி கடத்தும் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இம்மரங்களை தனியார் நிலத்திலிருந்து எடுத்தவை எனக் கூறி, வனத்துறையிடமிருந்தே அனுமதி பெற்று கடத்தப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், குடமாடி முதல் வாளையார் வரையிலான பகுதியில் புதிய சாலை அமைக்கவும், அதன் வழியாக முக்கிய அதிகாரிகள் மற்றும் விருந்தினர்களை ஜீப்புகளில் சுற்றுலா அழைத்து செல்லும் திட்டமும் சில வனத்துறை அதிகாரிகள் மூலம் செயல்படுத்தப்பட இருப்பது தெரியவந்துள்ளது.

இந்தச் செயல்கள் அனைத்தும் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் வன சட்ட விதிகளுக்கு எதிரானவை என வன ஆர்வலர்கள் குற்றம் சாட்டி, மரங்களை வெட்டும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வலியுறுத்தி வருகின்றனர். இந்த விவகாரம் தொடர்பாக, உயர்மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. (ஐ)

# உணர்வு சூழ் உலகம்!



யாமினி

இந்தக் கட்டுரையில் நாம் மூன்று விதமான குணாதிசயங்களைப்பற்றிப் பார்க்கப்போகிறோம். ஒவ்வொரு குணமும் உறவாடலை எப்படி நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ பாதிக்கிறதென்பதைப் பார்க்கப் போகிறோம். இந்தச் சவால்களை எவ்வாறு சமாளிப்பது என்பதைப் பார்க்கப் போகிறோம்.

**முதல் வகை, முரட்டுத்தனம் ( Aggressive ).**


இந்த வகை மக்களுக்குத் தான் மட்டுமே முக்கியம் என்கிற எண்ணம் ஓங்கி இருக்கும். இவர்களுக்குத் தங்களின் தேவை மட்டும்தான் முக்கியமானதாக இருக்கும். இவர்களுடன் எந்த விதமான உறவில் இருந்தாலும் மற்றவருக்குச் சிரமம்தான். எப்போதும் தன் தேவையை எந்தச் சூழ்நிலையிலும் உரக்கச் சொல்வதும், மற்றவரின் நிலை அறியாது, அறிந்து கொண்டாலும் கவலைப்படாது இருக்கும் இவர்களைச் சமாளிப்பது மிகக் கடினம். இவர்களோடு உறவாடுபவருக்கு (அது எந்த வகை உறவாக இருந்தாலும்), தனக்கென்று ஒரு வாழ்வு இருப்பதே மறந்துவிடும் அளவிற்கு நொந்து போய் இருப்பர்.

இந்த வகை மக்களுக்கு “ ம்ஹே“ என்கிற வார்த்தையைக் கேட்பது பிடிக்காது, ஆனால் அவர்கள் அநாயசமாகச் சொல்வார்கள்.

நீண்ட கால மகிழ்ச்சியான உறவுக்கான சாத்தியம் இவர்களோடு மிக மிகக் குறைவு. அப்படியே தொடர்ந்தாலும் அது மற்றவர் வேறு வழி இல்லாமல் இவர்களோடு ஒட்டிக்கொண்டிருப்பதே தவிர, அது நிச்சயம் ஆரோக்கியமான உறவாக இருக்காது.

**இரண்டாவது வகை அடிபணிபவர் ( Submissive ).**

இவர்களுக்குத் தங்களது தேவையைப் பற்றிய எண்ணமே இருக்காது. எப்போதும் மற்றவரின் புன்னகையோ, தலையசைப்போ, அங்கீகாரமோ இவர்களுக்குப் போதும். இவர்களைச் சுற்றி உள்ள அனைவரும் மகிழ்ச்சியாக, நிறைவாக இருப்பர். இவர்தான் அனைவரின் தேவையைச் சிரமேற்கொண்டு



நிறைவேற்றுவாரே! ஆனால் இவருக்கும் தேவைகள், ஆசைகள், முன்னுரிமைகள் இருக்கும் என்பது மற்றவருக்கு நினைவில்கூட இருக்காது. இவருக்கு நினைவிருந்தால்தானே அதை மற்றவர் நினைப்பார்கள்? இவர்களால் சுலபமாக “ம்ஹே” சொல்லவும் முடியாது. அப்படியே சொல்லி விட்டாலும் அதற்காகக் குற்ற உணர்ச்சி அதிகமிருக்கும்.

இவர்களின் வாழ்க்கை மிகவும் சுலபமாக இருப்பது போல் தோன்றும். ஏதோ ஒரு தருணத்தில் இவர் தனக்கென்று ஏதேனும் ஆசைப்படும்போதோ அல்லது யோசிக்கும் போதோ அதை மற்றவரிடம் வெளிப்படுத்தவே தயங்குவர். வெளிப்படுத்தினாலும் அதற்கு மற்றவர்கள் அவ்வளவு முன்னுரிமை தருவது சந்தேகமே. இவர்கள் அனைவரையும் அப்படித்தானே பழக்கி வைத்திருக்கிறார்களே. அப்போது தான் இழந்ததை எண்ணி வருந்த ஆரம்பிப்பார்கள்.

**மூன்றாவது வகை உறுதியானவர் ( Assertive )**

இவர்கள் முரட்டுத்தனமாகவும் இல்லாமல் அடிபணிந்தும் போகாமல் தங்களின் நிலைப்பாட்டைத் தெளிவாகவும்



நிதானமாகவும் எடுத்துரைக்கும் திறமை பெற்றவர்கள். “ம்ஹே“ எப்போது சொல்ல வேண்டுமோ அதை மற்றவரைக் காயப்படுத்தாமல் சொல்லத் தெரிந்தவர்கள்.

இந்த மூன்று வகையில் யாருக்கு மனம் அமைதியில் இருக்கும் என்பது உங்களுக்கே தெரிந்திருக்கும். எப்போதும் அடிபணிந்து கொண்டிருப்பவர் தன் வாழ்வின் மீதே பெரும் கசப்பில் இருப்பார்கள். அது மெல்ல மெல்ல தனது வாழ்க்கையை ரசித்து மனம் போல் வாழ்பவரின் மேல் பொறாமையாக மாறும். பொறாமை கொண்ட மனதில் அமைதி ஏது? எப்போதும் உணர்வுகள் கொந்தளிப்பில்தான் இருக்கும். மிகச்சிறந்த உதாரணம் மாமியாரும், மருமகளும். இன்றைய மாமியார்கள் பலர் தங்கள் வாழ்வு முழுதும் தனக்கென ஏதும் யோசிக்காமல் கணவர், குழந்தைகள், வீட்டுப் பெரியவர்கள், ஒரு வேளை பொருளீட்ட பணிக்குப் போனால் அந்தச் சுமை என அத்தனை பொறுப்பையும் சுமந்தவர்கள். குடும்பச்சுமை மொத்தமும் தலையில் இருந்தாலும், தான் சுயமாகச் சம்பாதித்தாலும் பொருளாதார சுதந்திரம் இல்லாதவர்கள். தனக்கான சின்ன சின்ன தேவைக்குக்கூட கணவனையோ வீட்டுப் பெரியவர்களையோ கேட்க வேண்டிய நிலையில் இருந்தவர்கள்.


இந்த நிலை மாற அவர்கள் போராடி இருக்க வேண்டும், அது அவர்களின் தவறுதான். அதை விட்டு விட்டு இன்றைய தலைமுறை பெண்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதும், முடிந்த அளவு இடையூறு செய்வதும் அவர்களின் மனநிலைக்கு நிச்சயம் ஆரோக்கியமானதல்ல. இதனால் கெடப்போவது மன நிம்மதி மட்டுமே.

ஆனால் அந்தத் தலைமுறை பெண்களின் வளர்ப்பு முறை, நம்பிக்கைகளை மனதில் வைத்து அவர்களை நாம் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம். போனது போகட்டும் மீதம் இருக்கும் வாழ்வை உங்கள் விருப்பப்படி வாழுங்கள் என ஊக்கப்படுத்துவதின் மூலம் இன்றைய தலைமுறை பெண்களும் மகிழ்ச்சியாக இருக்க முடியும், முந்தைய தலைமுறையும் கொஞ்சம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியும்.

அடுத்து முரட்டுத்தனமானவர். ஆரம்பத்தில் எல்லாம் நன்றாக இருப்பது போல் தோன்றினாலும் கூட இருப்பவரின் மனதில் ஒருவித சலிப்பும் வெறுமையும் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. எந்த உறவானாலும் அது அன்போ, சேவையோ இருபக்கமும் கொடுத்தலும் பெறுதலும் இருந்தால்தான் அது இனிக்கும். எப்போதும் கொடுத்துக்கொண்டே இருப்பவருக்கு ஒரு நாள் சலித்து போவது இயற்கைதானே?

அப்போது பிரிவு தவிர்க்க முடியாத விஷயமாகிறது. அத்தனை நாள் அனுபவித்த வசதிகளைத் திடீரென இழக்க நேரும் முரட்டுத்தனமான குணம் உள்ளவர்கள் திணறிப் போகிறார்கள். அவர்கூட இருந்தவரும் (இவர்கள் அநேகமாக அடிபணிந்து போகிறவராக இருக்க வாய்ப்புகள் அதிகம், இல்லாவிடில் எப்போதோ உறவு முறிந்திருக்கும்.) இத்தனை நாள் வாழ்வைத் தொலைத்த கசப்பில் இருப்பர். இரண்டுமே சமநிலையான ஆரோக்கிய மனதிற்குக் கேடுதான். பின் உணர்வுசார் நுண்ணறிவு எங்கிருந்து வேலை செய்யும்?

இவர்களின் வாழ்க்கை மிகவும் சுலபமாக இருப்பது போல் தோன்றும். ஏதோ ஒரு தருணத்தில் இவர் தனக்கென்று ஏதேனும் ஆசைப்படும்போதோ அல்லது யோசிக்கும் போதோ அதை மற்றவரிடம் வெளிப்படுத்தவே தயங்குவர். வெளிப்படுத்தினாலும் அதற்கு மற்றவர்கள் அவ்வளவு முன்னுரிமை தருவது சந்தேகமே. இவர்கள் அனைவரையும் அப்படித்தானே பழக்கி வைத்திருக்கிறார்களே. அப்போது தான் இழந்ததை எண்ணி வருந்த ஆரம்பிப்பார்கள்.



# காசாவுக்கு சென்ற கப்பலை சிறைபிடித்த இஸ்ரேல்: மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கைது



கிரெட்டா துன்பர்க் உள்ளிட்ட சமூக செயற்பாட்டாளர்களுடன் சென்ற காசாவுக்கான மனிதாபிமான கப்பலை இஸ்ரேல் படையினர் சிறைபிடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாலஸ்தீனத்தின் காசா பகுதி ஹமாஸ் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபரில் இஸ்ரேலுக்குள் நுழைந்து 1,200 அப்பாவி பொது மக்களை சுட்டுக்கொன்றனர். இதையடுத்து காசா மீது இஸ்ரேல் போர் துவங்கியது. இஸ்ரேல் தாக்குதலால் காசாவில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அங்குள்ள மக்களுக்கு பல்வேறு நாடுகள் உதவிகள் செய்தி வருகின்றன.

ஹமாஸ் தலைவன் முகமது சின்வாரை கொன்றது இப்படிதான்: இஸ்ரேல் தகவல்!

இந்நிலையில், காசா பகுதிக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகள் கொண்டு சென்ற 'மட்லீன்' என்ற கப்பலை சர்வதேச கடல்பரப்பில் வைத்து இஸ்ரேல் படையினர் சிறைபிடித்தனர். மேலும், அந்தக் கப்பலில் பயணித்த காலநிலை செயற்பாட்டாளர் கிரெட்டா துன்பர்க் மற்றும் ஐரோப்பிய பார்லிமென்ட் உறுப்பினர் ரிமா ஹசன் உள்ளிட்டோரை கைது செய்தனர்.

சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை தொடர்ந்து, கப்பலுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதாக ப்ரீடம் ப்ளோடில்லா அமைப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ், 'மல்டீன் கப்பலை காசாவுக்கு செல்ல அனுமதிக்க மாட்டோம். தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். காசாவில் உள்ள ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்வதை தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,' என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கப்பலில் இருந்தவர்கள் கைகளை உயர்த்திய நிலையில் அமர்ந்திருக்கும் போட்டோ வெளியாகி சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## அமெரிக்காவில் வெடித்த கலவரம் கடும் நடவடிக்கை எடுக்க டிரம்ப் உத்தரவால் பரபரப்பு



அமெரிக்காவின் லாஸ் ஏஸ்சல்ஸில் வெடித்த கலவரத்தால், புலம்பெயர்ந்தோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க அதிபர் டிரம்ப் உத்தரவிட்டார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், சட்டவிரோதமாக குடியேறிய 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் அங்கு போராட்டம் வெடித்தன. இந்நிலையில், அதிபர் டிரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ஒரு காலத்தில் சிறந்த அமெரிக்க நகரமாக இருந்த லாஸ் ஏஞ்சல்ஸ், சட்டவிரோத குடியேறிகளாலும், குற்றவாளிகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டு உள்ளது.

இப்போது வன்முறை, கிளர்ச்சி கும்பல்கள் எங்கள் நாடு கடத்தல் நடவடிக்கைகளை நிறுத்த தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஆனால் இந்த சட்டவிரோத கலவரங்கள் எங்கள் உறுதியை வலுப்படுத்துகின்றன.

சட்டவிரோத குடியேற்றம்: லாஸ் ஏஞ்சல்ஸில் அதிரடி கைது அமெரிக்காவில் வெடித்தது போராட்டம்

உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலாளர் கிறிஸ்டி நோயம், பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் மற்றும் அட்டர்னி ஜெனரல் பாண்டி ஆகியோர், மற்ற அனைத்து தொடர்புடைய துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, லாஸ் ஏஞ்சல்ஸை புலம்பெயர்ந்தோர் படையெடுப்பிலிருந்து விடுவிக்க முயற்சி செய்ய வேண்டும்.

கலவரங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நான் உத்தரவிட்டு உள்ளேன். லாஸ் ஏஸ்சல்ஸ ில் சட்டம் ஒழுங்கு மீட்டெடுக்கப்படும். சட்டவிரோத குடியேறிகள் வெளியேற்றப் படுவார்கள். அவர்களின் பிடியில் இருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் விடுவிக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இது குறித்து அமெரிக்க புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ., காஷ் படேல் கூறியதாவது:

ஒரு போலீஸ்காரரை தாக்கினால் நீங்கள் சிறைக்கு செல்ல நேரிடும். நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்? எப்படி இங்கு வந்தீர்கள் அல்லது எந்த இயக்கம் உங்களுக்கு பின் ஆதரவாக இருக்கிறது என்பது எங்களுக்கு முக்கியமல்ல. உள்ளூர் போலீசார் கூறுவதை நீங்கள் கேட்கவில்லை என்றால், நாங்கள் விசாரிக்க நேரிடும். இவ்வாறு காஷ் படேல் எச்சரித்துள்ளார். (ஐ)

## நாய்களை தெருக்களில் வாக்கிங் அழைத்து வர தடை ஈரான் அரசு



ஈரானில் உள்ள 20 நகரங்களில் நாய்களை தெருக்களில் வாக்கிங் அழைத்துச் செல்வதற்கான தடையை அந்நாட்டு அரசு நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2019ம் ஆண்டு ஈரானின் தலைநகர் தெஹ்ரனில் உள்ள தெருக்களில் நாய்களை வாக்கிங் அழைத்து செல்ல முதலில் தடை விதிக்கப்பட்டது. நாய்களை வாக்கிங் அழைத்து செல்வதனால், பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈரான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவுகளை அமல்படுத்த தவறிய தலைமை செயலர்கள் மீது அவமதிப்பு வழக்கு இதைத் தொடர்ந்து, இந்த உத்தரவு மேலும் 20 நகரங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. கெர்மன்ஷா, லாம், ஹமதான், கெர்மன், போரோஜெர்டு, ரோபர்ட் கரீம், லாவாசனத், கோல்ஸ்டன் உள்ளிட்ட நகரங்களிலும் நாய்களை வாக்கிங் அழைத்து செல்ல தடை செல்லப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறும் நாய் உரிமையாளர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கட்டிப்பிடிக்க பணம் தரும் சீன பெண்கள்



*நம் அண்டை நாடான சீனாவில், இளம் பெண்கள் பலர் மன அழுத்தம், படிப்பு அல்லது வேலை குறித்த பயம், உடல் தோற்றம் குறித்த கவலைகளுடன் உள்ளனர்.*

*இவர்களில் பலர் மேன் மம்ஸ் எனப்படும், ஆண் தாய்களிடம் இருந்து ஐந்து நிமிட கட்டிப்பிடி சேவையை பெறுகின்றனர்.*

*இதற்காக 250 முதல் 600 ரூபாய் வரை கட்டணமாக தருகின்றனர்.*

*இந்தக் கட்டிப்பிடி சேவை சமூக வலைதளங்கள் வாயிலாக ஏற்பாடு செய்யப்படுகிறது. பொது இடங்களான மெட்ரோ நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றில் நடைபெறுகிறது.*

*இதில் பங்கேற்கும் ஆண்களை அவர்களின் பொறுமை, உடல் அமைப்பு, மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் பெண்கள் தேர்வு செய்கின்றனர்.*

*இதில் ஜோ எனும் இளைஞர், 34 முறை கட்டிப்பிடி சேவை வழங்கி, அதற்கு 21,000 ரூபாய் கட்டணமாக வசூலித்ததாக கூறியுள்ளார். (ஐ)*

## நபளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநுர, ஜேர்மன் ஜனாதிபதி, வர்த்தக அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

11 மற்றும் 12 ஆம் திகதிகளில் அங்கு சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கிடையில் இரு தரப்பு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. ஜேர்மன் முதலீடுகளை இலங்கைக்குப் பெறுவது சம்பந்தமாகவும், ஆடை ஏற்றுமதி பற்றியும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட குழுவினரும் ஜேர்மன் செல்கின்றனர்.

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு அமெரிக்காவில் வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பா சந்தையை இலங்கை இலக்கு வைத்துள்ள நிலையில், ஜனாதிபதியின் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## யாழில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிலோ 100 கிராம் கஞ்சாவும், மற்றைய நபரிடம் இருந்து 3 கிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிலோகிராம் கஞ்சாவினை மீட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது வவுனியா, கதிரவேல்பூவரசங்குளம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து 10 கிலோகிராம் கஞ்சாவினைக் கைப்பற்றியுள்ளதுடன், 45 வயதுடைய ஒருவரினையும் கைது செய்து ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா ஓமந்தை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவகாரம் தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தைப் பணி இடைநீக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## கைது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவுக்குச் சென்றுள்ள சில அரசியல்வாதிகள் திருப்பதி உள்ளிட்ட தலங்களிலும் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் ரவி பணி இடைநீக்கம்!

*கொழும்பு, ஜூன் 09*

*அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் ரவி குமுதேஷ் நிறுவன விதிகளை மீறி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டதால் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.*

*இந்த இடைநீக்கம் அவர் வேட்புமனுவில் கையெழுத்திட்ட நாளான 10.10.2024 முதல் அமுலுக்கு வரும் என்றும், இடைநீக்க காலத்தில் அவருக்குச் சம்பளமோ அல்லது கொடுப்பனவுகளோ வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்ட ரவி குமுதேஷ், நிறுவன விதிகளை மீறியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளதோடு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரை அவர் வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம்!

முள்ளியவளை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்றையதினம் சிறப்பாக இடம்பெற்று வரும் நிலையில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடி பல்வேறு வகையான நேர்த்தி கடன்களை நிறைவேற்றி வருகின்றனர்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை, பாற்செம்பு, பரவ காவடி, தீச்சட்டி என பல்வேறு வகையான நேர்த்தி கடன்களை நிறைவேற்றி வருகின்றனர்.

பொங்கல் உற்சவத்தில் ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்புக்காக பொலிசார், இராணுவத்தினர் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர் ஆகியோர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தினர் சுகாதார நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் விடுத்துள்ள அறிவித்தல்!

*தேசிய பொசன் வாரம் ஜூன் 7ஆம் திகதி முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*

*பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 7,021 பொசன் தானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.*

*இந்த நிலையில் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பொசன் தானங்களில் கலந்துகொள்ளல் மற்றும் பொசன் தானங்களை ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை தவிர்த்தல் வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*பொசன் தானம் வழங்க விரும்புபவர்கள் முதலில் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தில் பதிவு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதிகளவிலான பொசன் தானங்கள் அநுராதபுரம்,பொலன்னறுவை, குருணாகல் மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், சுகாதார சீர்கேட்டுடன் இயங்கும் பொசன் தானங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

# போதைப்பொருள் பயன்படுத்திய தரம் 10 மாணவர்கள் மூவர் கைது!

சாவகச்சேரி, ஜூன் 09

யாழ். தென்மராட்சி, சாவகச்சேரி நகரில் பாடசாலை மாணவர்களுக்கு நீண்ட காலமாகப் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டு வந்த வர்த்தகர் ஒருவர் இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் .

சாவகச்சேரி நகர் பகுதியில் பாடசாலை மாணவர்கள் சிலர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கும் போதைப்பொருள் குற்றச் செயல் தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைவாக சாவகச்சேரியில் உள்ள பிரபல பாடசாலையின் தரம் 10 மற்றும் 11 மாணவர்கள் மூவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டு அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மரத் தளபாட திருத்த வேலை செய்யும் வர்த்தக நிலையத்தை நடத்தும் 45 வயதான வர்த்தகர் ஒருவரிடம் இருந்து போதை மாத்திரைகள் பெற்றுக்கொள்வது தெரியவந்துள்ளது. இந்தநிலையில் மேற்படி வர்த்தகர் 330 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரியவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து அந்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தான் ஐஸ் போதைக்கு அடிமையானவர் எனவும், போதை மாத்திரைகளைப் பாடசாலை மாணவர்களுக்கு விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தில் ஐஸ் போதைப்பொருளைப் பெற்றுப் பாவித்து வருகின்றார் எனவும் பொலிஸாரிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெண்ணொருவர் படுகொலை!

குளியாப்பிட்டி, ஜூன் 09

குளியாப்பிட்டி - வல்பிடகம பிரதேசத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று குளியாப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவத்தில் 44 வயதுடைய வடுமுன்னேகெதர பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணவருடன் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மண்வெட்டியைக் கொண்டு கணவன் தாக்கியதில் மேற்படி பெண் மரணித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சடலம் குளியாப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலையாளியான மேற்படி பெண்ணின் கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குளியாப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவனை முடங்கும் அபாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ். தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு எதிரான திட்டமிட்ட முயற்சிகளால் மருத்துவமனையின் இயங்குதிறன் முற்றாகப் பாதிக்கும் நிலையை நோக்கி நகர்ந்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழைக் கிளை தெரிவித துள்ளது. இது தொடர்பாக அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் பொதுமக்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் சில தன்னார்வலர்களின் கடுமையான உழைப்பின் ஊடாக நிறுவப்பட்ட இந்த மருத்துவமனை, இன்றுவரை ஆயிரக்கணக்கான புற்றுநோயாளிகளுக்கு உயிருக்குப் போராடும் வாழ்வதார சிகிச்சையைக் வழங்குகின்றது. ஆயினும் ஆனால், அப்போதும் இப்போதும் தொடர்ந்து சிலர் மேற்கொள்ளும் மறைமுகமான நடவடிக்கைகள், வஞ்சகப் போக்குகள் மற்றும் திட்டமிட்ட இடையூறுகள் இதன் நிரந்தர மேம்பாட்டுக்கும் சேவைக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றன.

பல ஆண்டுகளாக புற்றுநோயாளர்களுக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றி வரும் புற்றுநோய் நிபுணர் மருத்துவர் கிருஷாந்திக்கு எதிராக நடக்கும் அவதூறு பரப்பல், சமூக வலைத்தளங்களினூடான வசைபாடல்கள் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்களை எமது சங்கம் கடுமையாகக் கண்டிக்கின்றது.

அவரை மனதளவில் பாதித்து, சேவையில் இருந்து பின்வாங்க வைக்கவே இது மேற்கொள்ளப்படுகின்றது என்று எமது சங்கம் தெளிவாக அறிந்து வருகின்றது.

சவாலுக்கு உரிய இந்தச் சூழ்நிலை ஒரு சில தனிநபர்களின் துயரம் மட்டுமல்ல் நோயாளர்களின் உயிரிழப்புக்கு வழிவகுக்கும் சமூக மருத்துவப் பின்னடைவுகளுக்கு இடமளிக்கும் நிலையை ஏற்படுத்தும். மருத்துவ நிபுணர்களுக்கு எதிரான இத்தகைய களங்கப்படுத்தல், ஏழை நோயாளர்களின் உரிமைகளை நேரடியாக தாக்குகின்றது.

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையின் சேவைகள் குறைக்கப்பட்டு, அதன் தரம் சிதைக்கப்படுவதற்கான பின்னணியில் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல் மற்றும் சட்டவிரோத ஒழுங்குகள் செயற்படுகின்றன என்பதையும், அவை உறுதியான தண்டனைவிதிகள் இன்றி தொடர்கின்றன என்பதையும் எமது சங்கம் ஆழ்ந்த கவலையுடன், உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழை கிளை புற்றுநோய் நிபுணர் மருத்துவர் கிருஷாந்தியின் பாதுகாப்பும், பணிச் சுதந்திரமும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அவதூறு பரப்பும் நபர்களுக்கு எதிராக உடனடியாக நிர்வாக, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

தெல்லிப்பழை மருத்துவமனை மற்றும் அதன் அனைத்து பிரிவுகளும் புற்றுநோய் சிகிச்சை பிரிவு உள்ளடங்கலாக பாதுகாக்கப்பட்டு மேம்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நோயாளர்களுக்கான உயர்தர சிகிச்சைகள் அரச மருத்துவமனையில் தொடர வேண்டும் என்பதற்காக, எதிர்வரும் நாள்களில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அவசியமானால் தீவிரப்படுத்தப்படும். நமது நோக்கம் உன்னத நோக்கம் கொண்ட தனிநபர்களைக் காப்பதல்ல் நோயாளியின் உரிமைகள், வாழ்க்கை தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே.” - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!